₹100/-

ஞானகுரு

# மகிழ்ச்சி

3 - 7

ஜூலை 2024

எஸ்.கே.முருகன்



## கவலையும் ஆறுதலும் பிறரால் கிடைப்பதில்லை

Online
கவுன்சிலிங்
WhatsApp Call Only



Talk Therapy

திருமணத்துக்கு முன் / பின் குழப்பங்கள், காதல் பிரச்னைகள், குழந்தை வளர்ப்பு தடுமாற்றங்கள், முடிவு எடுப்பதில் சிரமம் போன்ற மன நல சிக்கல்களை மனம்விட்டுப் பேசுங்கள்...

மனவள ஆலோசகர்
எஸ்.கே.முருகன்
ஜிஜி ரிலேசன்ஷிப் கவுன்சிலிங்.
முன்பதிவுக்கு :
+91 80725 89355



ஆசிரியர் பக்கம்

# கடினமான முடிவுகளைத் தேர்வு செய்யுங்கள்.



கண்ணுக்கு முன் இரண்டு தீர்வுகள் தென்படும் நேரத்தில், கடினமான முடிவுகளை தேர்வு செய்வது மிகப்பெரிய நிம்மதியும் திருப்தியும் தருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உதாரணத்துக்கு சில சம்பவங்கள்.

இப்போது வாடகைக்கு இருக்கும் வீடு வசதிக் குறைவு என்றாலும் அக்கம்பக்கத்தில் நன்றாகப் பழகுகிறார்கள். வீட்டுக்காரர் தொந்தரவு இல்லை. மழை காலத்தில் மட்டும் சிக்கல். அடுத்த ஏரியாவில் கூடுதல் அறையுடன் ஒரு வீடு வாடகைக்கு வருகிறது. பழகிய ஏரியாவை விட்டு மாறுவதா வேண்டாமா என்ற குழப்பம் வருகிறது. என்ன முடிவு எடுப்பீர்கள்..?

மாதக் கடைசி. கோவா டூருக்கு நண்பர் அழைக்கிறார். செலவையும் ஏற்பதாகச் சொல்கிறார். டூர் செல்வது மகிழ்ச்சி என்றாலும் பணம் இல்லாமல் பங்கெடுக்க மனம் வராமல் குழப்பத்தில் விழுகிறீர்கள். என்ன முடிவு எடுப்பீர்கள்..?


உறவினர் வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள். கிளம்பும் நேரத்தில் கடுமையான மழை. தங்கிவிட்டு காலையில் போகுமாறு வாய் வார்த்தையாகச் சொல்கிறார்கள். மழையில் நனைவதைவிட தங்குவது சௌகர்யம் தான். ஆனாலும், குழப்பமாக இருக்கிறது. என்ன முடிவு எடுப்பீர்கள்..?

இது போன்ற தருணங்களில் சுகமான, வசதியான, சௌகரியமான முடிவுகளை ஒருபோதும் எடுக்காதீர்கள். சிறு சிரமங்கள் இருந்தாலும் ஏற்றுக்கொண்டு கடின முடிவை தேர்வு செய்யுங்கள். பின்னர் அதற்காக வருத்தப்படுவதற்கு எந்த அவசியமும் நேராது.

உறவுகளில் ஒருவரை விரும்புகிறீர்களா இல்லையா என்ற குழப்பம் வந்தாலே, விலகி விடுங்கள். வேண்டுமா, வேண்டாமா என்று குழப்பம் வந்தாலே வேண்டாம் என்ற முடிவுக்கு வந்துவிடுங்கள்.

இந்த முடிவும் ஒரு வேளை தவறாக இருக்கலாம். ஆனால், இது நீங்கள் விரும்பி ஏற்றுக்கொண்ட முடிவு என்பதால், எளிதில் கடந்து விடுவீர்கள். குழப்பத்தைத் தீர்க்கும் இந்த சூத்திரம் தெரிந்துவிட்டால், இனியெல்லாம் மகிழ்ச்சியே.

ஆசிரியர்



# எந்த மனிதருக்கும் கடவுள் மீது நம்பிக்கை கிடையாது

“பகுத்தறிவு என்றும் கடவுள் நம்பிக்கை தேவையில்லை என்றும் நீங்கள் பேசி வருகிறீர்கள். ஆனால், கோயில்களில் இப்போது கூட்டம் பெருகுகிறது. பக்தர்கள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. உண்டியலில் பணம் கொட்டுகிறது. அப்படியென்றால் பக்தி அதிகமாகிவிட்டது, கடவுள் நம்பிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்று தானே அர்த்தம்'' என்று ஞானகுருவிடம் கேள்வி கேட்டார் மகேந்திரன்.

''கடவுள் நம்பிக்கை இருப்பதாக கண் முன் நீங்கள் பார்ப்பது எல்லாம் உண்மை அல்ல. கடவுள் மீது நம்பிக்கை இல்லாதவர்களே இந்த உலகில் அதிகம்” என்றார் ஞானகுரு.

''அதெப்படி.... அதற்கு வாய்ப்பே இல்லை'' என்றார் மகேந்திரன்.

“எல்லா மதத்தினரும் கடவுள் என்று ஒருவரை ஏற்றுக்கொள்கிறார்கள். கடவுளை நம்புகிறார்கள். ஆனால், சிவனை வணங்குபவர் விஷ்ணுவை கண்டுகொள்வதில்லை. கிருஷ்ணரை கும்பிடுபவர் சிவனை ஏற்பதில்லை. இந்து மதத்தினர் அல்லாவையும் இயேசுவையும் கடவுள் என்று நம்புவதில்லை. இஸ்லாமியர்களிடம் கேட்டால் அல்லாவைத் தவிர எல்லாமே சாத்தான் என்று சொல்வார்கள். கிறிஸ்தவம், சீக்கியம் என்று உலகில் உள்ள அத்தனை மதங்களும்




www.gyaanaguru.com

## மந்திரச் சொல்

சாக்கடை நீரிலும் செடி முளைப்பது போன்று, எத்தனை பேர் தடுத்தாலும் ஒருவரால் வெற்றி பெற முடியும்.

அவர்களுடைய கடவுளைத் தவிர மற்றவர்களை முழுமையாக மறுக்கிறார்கள்.

எல்லோரும் ஒரே கடவுளை வெவ்வேறு வழிகளில் வணங்குகிறார்கள் என்பது தானே உண்மை. ஆனால், தாங்கள் வணங்கும் கடவுள் மீது நம்பிக்கை வைத்திருப்பவர் மற்றவர் வணங்கும் கடவுளை நம்பவில்லை என்றால் என்ன அர்த்தம்..? அவர்களும் மற்ற கடவுள்களுக்கு மறுப்பாளர்கள். அதாவது, தங்கள் கடவுளை மட்டுமே நம்புகிறார்கள் என்றால் அவர்கள் நாத்திகம் பேசுபவர்களை விட மோசமான கடவுள் மறுப்பாளர்கள்..



இன்னொரு விஷயம் புரிந்துகொள்ளுங்கள். எதிர்பாராத வகையில் நோய், தோல்வி, துன்பம் கிடைக்கும் நேரங்களில் எத்தனை சிறந்த பக்தியாளர் என்றாலும், அவர் வணங்கும் கடவுளை ஒரு கணம் சந்தேகப்படுகிறார். கடவுள் உண்மையில் இருந்தால் இப்படியெல்லாம் தன்னைப் போன்ற பக்திமானுக்கு பிரச்னை நடக்க விடுவாரா என்று அவநம்பிக்கை கொள்கிறார். அவர் கொஞ்சநேரம் கடவுள் மீது அவநம்பிக்கை கொள்கிறார் என்றாலும், அவரும் நாத்திகரே. இந்த வகையில் பார்த்தால், இந்த உலகில் முழு ஆத்திகர் என்று ஒருவர் கூட இருக்க மாட்டார்.

கடவுள் காப்பாற்றுவார் என்று சொல்லும் நபர் மருத்துவமனைக்குச் செல்லாமல், மருந்துகள் சாப்பிடாமல் இருப்பதில்லை. தங்களை சாமியார் என்றும் கடவுளுக்கு நெருக்கமானவர் என்று சொல்லிக்கொள்ளும் காஞ்சி பெரியவர், பங்காரு அடிகளார், புட்டபர்த்தி சாய்பாபா போன்றவர்களும் நோய் வந்து செத்துத் தான் போனார்கள்.

இன்றைய தினம் தங்களை கடவுள் அவதாரமாக சொல்லிக்கொள்ளும் ஜக்கி வாசுதேவ், நித்தியானந்தா, பாபா ராம்தேவ் போன்றவர்களும் மருத்துவர்களை நம்பும் அளவுக்கு கடவுள் மீது நம்பிக்கை வைப்பதில்லை.

கடவுள் என் கண்ணுக்குத் தெரிந்தார் என்று யாரிடமாவது சொல்லிப் பாருங்கள். ஒருவர் கூட உங்களை நம்ப மாட்டார்கள். ஏனென்றால், கடவுள் இங்கே வர மாட்டார் என்பதும் யாருடைய கண்களுக்கும் அவர் தெரிய மாட்டார் என்பதும் மக்களுக்கு நன்றாகவே தெரியும்.




கடவுள் எல்லாம் வல்லவர், அவர் நினைத்தால் எதையும் செய்வார், எல்லோரையும் அவர் காப்பாற்றுவார் என்கிறார்கள். அந்த கடவுளுக்காக மிகப்பெரிய கோயில் கட்டுகிறார்கள். கடவுளுக்கு வைரமும் தங்கமும் போட்டு அலங்காரம் செய்கிறார்கள். ஆனால், கடைசியில் எல்லாவற்றையும் பத்திரமாக லாக்கரில் பூட்டி வைக்கிறார்கள்.

இந்த உலகத்தையே பாதுகாக்கும் கடவுள், தன்னுடைய கோயிலையும் தன்னுடைய நகைகளையும் பாதுகாப்பார் என்று எந்த மனிதரும் நம்ப மாட்டார். ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டால், ‘கடவுள் மீது நம்பிக்கை இருக்கிறது, நாங்கள் மனிதரைத் தான் நம்பவில்லை. அதனால் தான் கோயிலுக்கு பூட்டு போடுகிறோம்’ என்கிறார்கள். அப்படியென்றால் கடவுளை விட பெரியவனா மனிதன்..? மனிதனுக்கு கடவுள் என்பது ஒரு குருட்டு நம்பிக்கை, ஒரு நல்ல பொழுதுபோக்கு, அவ்வளவுதான்...” என்று சிரித்தார் ஞானகுரு.

யோசிக்கத் தொடங்கினார் மகேந்திரன்.







# உலகின் பிரபலமான ஐந்து விதிகள்

ஒவ்வொரு நபரின் வாழ்க்கையும் வித்தியாசமானது. ஒவ்வொரு நபரின் வாழ்வியல் சூழலும் உடல் நலனும் வெவ்வேறு வகையில் அமைந்திருக்கிறது. ஆனால், மனிதர்களின் மனம் கிட்டத்தட்ட எல்லோருக்கும் ஒரே வகையில் செயலாற்றுகிறது. அதனாலே லட்சியம், நம்பிக்கை, பயிற்சி, முயற்சி, பொறுமை ஆகியவற்றைக் கடைபிடிப்பவர்கள் எப்படியேனும் வெற்றியைத் தொட்டு விடுகிறார்கள். உலகம் முழுவதுமுள்ள மனிதர்கள் வெற்றிக்கு உதவும் ஐந்து விதிகள் இங்கே கொடுக்கப் பட்டுள்ளன. உங்களுக்கும் இது ஏற்றதாகவே இருக்கும்.



## 05 மர்ஃபி விதி

'மழையில் நனைந்துவிட்டதால் ஜலதோஷம் பிடித்துவிடக் கூடாது' என்று நினைக்கிறீர்கள். எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆவி பிடிப்பது, விக்ஸ் போடுவது என்றெல்லாம் நிறைய செய்கிறீர்கள். ஆனாலும், ஜலதோஷம் பிடித்தே விடுகிறது. ஆம், எது நடந்து விடக்கூடாது என்று அதிக அச்சத்துடன் இருக்கிறீர்களோ அது நடந்து விடும் வாய்ப்பு அதிகம் என்பதே மர்ஃபி விதி. ஏதேனும் ஒரு வேலை செய்யும் நேரத்தில் இது தப்பாகத்தான் முடியும் என்ற எண்ணம் தோன்றினால், நிச்சயம் அது தப்பாக முடிந்துவிடும். இதை மாற்ற வேண்டும் என்றால் நேர்மறை சிந்தனையை வளர்த்துக்கொள்வது மட்டுமே ஒரே வழி.

## 04 கிட்லின் விதி

நிறைய அலுவலகங்களில் அதிகாரிகள் அறையில் ஒரு போர்டு மாட்டப்பட்டிருக்கும். அதில் தற்போதைய பிரச்னை பற்றியும் அதற்கு என்னென்ன தீர்வுகள் என்பது குறித்தும் எழுதி வைத்திருப்பார்கள். ஒரு பிரச்னை உருவாகிறது என்றால், அந்த பிரச்னையை தெளிவாகவும் துல்லியமாகவும் எழுதி விட்டாலே, அதைத் தீர்ப்பதில் பாதி வெற்றி கிடைத்துவிடும் என்பதே கிட்லின் விதி. எழுதுவது என்பது ஒரு முழுமையான ஆய்வு போன்றது. அந்த பிரச்னையில் இருந்து விலகி நின்று பார்க்கும் நபர்களுக்குத் தான், அதைப் பற்றி தெளிவாகவும் துல்லியமாகவும் எழுத முடியும். ஆகவே, ஏதேனும் ஒரு பிரச்னை வருகிறது என்றால், முதலில் அது என்ன பிரச்னை என்று முழுதாக எழுதுவதற்கு முயற்சி செய்யுங்கள். எழுதும் நேரத்திலேயே அதற்கான விடை கிடைத்துவிடும் எனப்படும் கிட்லின் விதி எளிதான வெற்றிக்கு வழி.

## 03 கில்பார்ட் விதி

ஒரு டெய்லரிங் கடையில் 10 பேர் வேலை செய்கிறார்கள் என்றால், யார் துணியை கட் செய்வது, யார் தைப்பது, யார் பட்டன் வைப்பது, யார் அயர்ன் செய்து அடுக்குவது என்று மிகத்தெளிவாக வேலைகள் வரையறுத்துக் கொடுக்கப்பட வேண்டும். ஒரு குழந்தை கூட புரிந்துகொள்ளும் வகையில் செயல் திட்டம் வகுத்துக் கொடுப்பதே வெற்றிக்கு எளிய வழி என்பது கில்பார்ட் விதி. அவரவர் வேலையை அவரவர்கள் வழியில் பார்த்துக்கொள்வார்கள் என்று நம்பிக்கை வைத்தால், உருப்படியாக ஒரு வேலையும் நடக்காது. எனவே, ஒரு வேலையை முடிக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டால் அதை எப்படி சரியாக செய்து முடிப்பது என்ற வழியைத் தீர்மானிப்பதே முக்கியம் என்பது கில்பார்ட் விதி. இந்த செயலில் வேறு யாருடைய தலையீடும் இருக்கக்கூடாது. திட்டம் வகுப்பவரைத் தவிர மற்ற அனைவரும் திட்டத்தின் ஒரு அங்கமாக மட்டுமே இருக்க வேண்டும். வேறு யாரேனும் தீர்வு தருபவர்களாக, வழி காட்டுபவர்களாக இருக்கக் கூடாது. அப்படி ஒருவர் இருந்தால் அது அவர்கள் விருப்பத்துக்கு நடக்குமே ஒழிய திட்டத்தை நிறைவேற்ற பயன் அளிக்காது. ஆகவே, மிகத்தெளிவான செயல்முறைகளை வகுப்பது மட்டுமே திட்டத்தைக் குழப்பமில்லாமல் முடிக்கும் வழி.

## 02 வில்சன் விதி

ஒரு ஹோட்டல் சிறப்பாக நடக்கிறது என்பதற்காக அதில் எந்த மாறுதலும் செய்யாமல் புதிய திறமையைக் காட்டாமல் நடத்திக்கொண்டே இருந்தால், அந்த ஹோட்டல் மிக விரைவில் போட்டியாளர்களிடம் தோற்றுப் போய்விடும். எனவே, வெற்றி அடைந்தவர் என்றாலும் மென்மேலும் திறமையை வளர்த்துக்கொள்ளவும், புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்திக்கொண்டே இருந்தால் மட்டுமே தொடர் வெற்றி கிடைக்கும் என்பது வில்சன் விதி. அறிவையும் புத்திசாலித்தனத்தையும் வளர்க்கும் செயல்களை முதன்மைப்படுத்தினால் பணம் தேடி வரும். ஒரு மருத்துவர் புதுப்புது மருந்துகள், புதுப்புது மருத்துவ வழிமுறைகளை படிக்கவில்லை என்றால் புதியவர்களுடன் போட்டியிட முடியாமல் பின்னுக்குத் தள்ளப்படுவார். ஆகவே, திறமையை வளர்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பது வில்சன் விதி.

## 01 ஃபாக்லேன்ட் விதி

ஒரு நிறுவனம் அல்லது தொழில் நன்றாக நடந்துகொண்டிருக்கும் நேரத்தில், நிறுவனத்திற்கு சொந்தமாக ஒரு இடம் சும்மா இருக்கிறது என்பதற்காக அங்கே ஒரு புதிய ஷோ ரூம் போடுவது, பொழுதுபோக்கு மையம் கட்டுவது என்று தேவை இல்லாத விஷயம் எதுவும் செய்யக்கூடாது. அதாவது, தேவை இல்லாத நேரங்களில் தேவை இல்லாத முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும் என்பதே ஃபால்கேன்ட் விதி. நிறைய நிறுவனங்கள் தேவையில்லாத முடிவுகள் எடுப்பதாலே தோற்றுப் போகின்றன. இந்த ஐந்து விதிகளும் நிறுவனத்தின் வெற்றிக்கும், தனி நபரின் வெற்றிக்கும் பயன் தரக்கூடியவை. ஆகவே, எந்த ஒரு குழப்பம் வரும் நேரத்திலும் இந்த விதிகளை நினைத்துப் பாருங்கள், வெற்றி கிடைத்துவிடும்.

# இயற்கைக்கு ஏன் இத்தனை குரூரம்?

மரத்தில் சாய்ந்து அமர்ந்தபடி வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஞானகுருவை சந்தித்தார் மகேந்திரன். அவர் முகத்தில் நிறைய வருத்தம் தெரிந்தது.

‘‘எங்கள் வீட்டு பின்புற மரத்தில் நிறைய சிட்டுக் குருவிகள் வரும், அதற்கு தானியம் வைப்பதுண்டு. அப்படி சில சிட்டுக் குருவிகள் தானியம் சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு அணில் வந்தது. அது, திடீரென ஒரு சிட்டுக்குருவியைப் பிடித்து தின்னத் தொடங்கிவிட்டது. அத்தனை குட்டியூண்டு குருவியை இரக்கமில்லாமல் தின்று விழுங்குகிறது. ரத்தம் சொட்டச் சொட்ட அந்த குருவியை அணில் தின்பதைப் பார்க்கும் போது, இயற்கை ஏன் இத்தனை கொடூரமாகவும் குரூரமாகவும் இருக்கிறது என்று தோன்றுகிறது…’’

‘‘ரத்தம் சொட்டாமல் விழுங்கியிருக்க வேண்டும் என்கிறாயா..?’’

‘‘இதையும் குத்தலாகக் கேட்காதீர்கள். அழகான புள்ளி மானை புலி கொடூரமாக கழுத்தில் கடித்துத் தின்னுகிறது. தண்ணீர் குடிக்கும் ஒரு கன்றுக்குட்டியை முதலைதண்ணீருக்குள்இழுத்துச்சென்று தின்கிறது. ஏன் இத்தனை கொடூரம். நீங்கள் கடவுளை மறுக்கிறீர்கள். ஆனால், இயற்கையை ஏற்கிறீர்கள். இத்தனை கொடூரமான இயற்கையை நாம் மதிக்கத்தான் வேண்டுமா?’’ கோபமாகக் கேட்டார் மகேந்திரன்.

‘‘நீ மதித்தாலும் மதிக்காவிட்டாலும் இயற்கைக்கு எதுவும் நிகழப் போவதில்லை. ஒரு பூ அழகாக மலர்ந்து பூத்துக் குலுங்குவதை இயற்கையின் கருணை என்று நினைக்கிறாய். ஒரு எலியை பாம்பு விழுங்குவதை குரூரம் என்கிறாய். நீ மக்காச்சோளத்தைக் கடித்துத் தின்பதை கருணை என்கிறாய். அதையே விலங்குகள் செய்வது குரூரம் என்கிறாய், அப்படித்தானே…’’

‘‘அப்படியில்லை, இத்தனை குரூரம் எதற்கு என்று தான் கேட்கிறேன்..’’

‘‘உண்மையில் இயற்கைக்குக் கருணையும் இல்லை, குரூரமும் இல்லை. இயற்கை அதன் போக்கில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அதற்குபூமியில்வாழும்உயிரினங்களோ, பறவைகளோ, மனிதனோ ஏன் தண்ணீர், காற்று என எதுவுமே ஒரு பொருட்டல்ல. ஏனென்றால், இயற்கை தானே இயங்கிக்கொண்டு இருக்கிறது அவ்வளவுதான். ஒவ்வோர் உயிரும் அதனதன் பாதையில் உயிர் வாழ போராடுகின்றன. அதை குரூரம் என்று அழைத்தாலும் கருணை என்று அழைத்தாலும் செயல்கள் நடந்துகொண்டே இருக்கும். இதுவே இயற்கை என்று ஏற்றுக்கொண்டால், எல்லாம் இயல்பாகத் தெரியும்’’ என்றபடி அமைதியானார்.

அந்த மரத்தில் ஓடிய அணில் இப்போது மகேந்திரனுக்கு குரூரமாகத் தெரியவில்லை.




www.gyaanaguru.com

# விதிகள் இல்லாத விளையாட்டு

“சோம்பேறியாக எந்த வேலையும் பார்க்காமல் ஊர் சுற்றித் திரிவதும் கண்டவரிடமும் கையேந்தித் தின்பதும் கேவலமாக இல்லையா?” என்று வைத்தியநாதன் கேட்டதும் அவனையே உற்றுப் பார்த்தேன்.

‘‘உங்ககிட்ட எதைப் பத்தியும் பேசலாம், எதுக்காகவும் கோபப்படமாட்டீங்கன்னு அப்பா சொன்னார். அதான் மனசில் பட்டதைக் கேட்டேன். உங்களுக்கு பதில் சொல்ல விருப்பமில்லேன்னா வேண்டாம்” என்றான்.

வைத்தியநாதன் தயங்கித்தயங்கி பேசியதைக் கேட்டதும் சிரிப்பு வந்தது.

“விதிகள் இல்லாத விளையாட்டு உனக்குத் தெரியுமா?”

“அப்படின்னா...”

“ஒரு கால்பந்து மைதானத்தில் இறங்கினால் என்ன செய்வாய்?”

“பந்தை எடுத்துச் சென்று கோல் போட முயற்சி செய்வேன்”

“அதுதான் எழுதப்பட்ட விதி. அப்படி விதிகள் இல்லையென்று வைத்துக் கொள், அந்தப் பந்தை என்ன செய்வாய்?”

‘‘என்ன செய்ய முடியும், ஏதாவது புதிய விதிகள் உருவாக்கி விளையாட வேண்டியதுதான்.”

‘‘சபாஷ்... இதைத்தான் எல்லா மனிதர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். மனிதர்களாகப் பிறந்து விட்டதால் படிப்பது, வேலை தேடுவது, திருமணம் முடிப்பது, குழந்தை பெறுவது, அதனை வளர்ப்பது, திருமணம் முடித்துக் கொடுப்பது என்ற சக்கரத்தில் மாட்டி சுற்றிக்கொண்டே இருக்கிறார்கள். மனம் சலிப்படையும் போது அல்லது தோல்விகள், முதுமை ஏற்படும் நேரங்களில் இறைவனை நினைத்துக்கொள்வது என்ற விதிகளையும் மீறாமல் விளையாகிறார்கள். மனிதகுலம் தோன்றியதில் இருந்து இந்த விளையாட்டு தான் நடைபெறுகிறது. ஆனால் நான் விதிகளற்ற ஒரு விளையாட்டை விளையாடத் தொடங்கியிருக்கிறேன்”

“யாருடன் விளையாடுகிறீர்கள்?”



ஞானகுரு தரிசனம்


www.gyaanaguru.com

“இயற்கையுடன் மோதிக் கொண்டிருக்கிறேன். வெற்றி பெற்றால் இயற்கையின் மூலத்தைக் கண்டுபிடிக்க முடியும், இல்லையென்றால் தோற்றுப்போய் மரணமடையலாம். ஆனால் எதுவும் எனக்குச் சம்மதமே... இதில் உழைப்பு, சோம்பேறித்தனம், உபதேசம் என்பதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை. என் பதில் உனக்கு புரிகிறதா?” என்று வைத்தியநாதனிடம் கேட்டேன்.

“எல்லோருக்கும் எல்லாமே புரிஞ்சுட்டா, அப்புறம் கேள்வி கேட்கிறது யாரு...? பதில் சொல்றது யாரு?” என்றபடி அருகே வந்து அமர்ந்தார் சங்கரன்.

திடீரென தந்தையை அருகே பார்த்ததும் எழுந்து நின்றான் வைத்தியநாதன். எதிர்பாராத அவர் வருகையை நானும் ஆச்சர்யத்துடன் பார்க்கவே, சங்கரனே பதில் சொல்லத் தொடங்கினார்.

“நான் படிக்க ஆசைப்பட்டேன், ஆனா எங்க அப்பா ஆசைப்படி பூசாரியா மாறவேண்டியதாப் போச்சு. இப்ப நான் மனசார இந்த வேலை செஞ்சாலும், படிக்க முடியாத ஏமாற்றம், இன்னமும் இருக்கத்தான் செய்யுது. என் மகனும் என்னைப் போல கஷ்டப்படக் கூடாதுன்னு நினைச்சது உண்மைதான். அதுக்காகத்தான் அவனை உங்ககூட அனுப்பி வைச்சேன். ஆனா, அவன் மனசுலயும் கடைசி வரை ஒரு காயம் ஆறாம இருக்குமேங்கிறது இப்பத்தான் புரிஞ்சது. அதான் அவனாவது ஆசைப்பட்டபடி இருக்கட்டுமேன்னு கூப்பிட வந்தேன்” என்றார்.

என்னையறியாமல் கடகடவென சிரிப்பு வர, “காலம் கடந்து போச்சே...” என்று சொல்லி மேலும் சிரித்தேன்.

“ஆமாப்பா... இத்தனைநாளா சுயநலமா இருந்துட்டேன். நான் தேடினது எல்லாம் நிஜமான சந்தோஷம் இல்லைன்னு தெரிஞ்சிடுச்சு. இனிமேயாவது நீங்க சொல்றபடி கேட்குறேன்பா. உங்களுக்கு ரொம்பவும் தொந்தரவு கொடுத்துட்டேன்” என்றான்.

“இல்லப்பா... ” என்று பேசமுயன்ற சங்கரனை தடுத்து நிறுத்தினேன்.

“முதலில் அவன் மகனாக இருக்கட்டும், அப்புறம் மகானாகட்டும்” என்றதும் சங்கரன் முகத்தில் பொலிவு வந்தது.

“‘வைத்தியநாதா... நீ வீட்டுக்குப் போ. நான் செண்பகாதேவி வரை இவருடன் சென்றுவிட்டு வருகிறேன்’’ என்று சங்கரன் சொன்னதும் தலையாட்டிவிட்டு கீழே இறங்கத் தொடங்கினான்.


“சாமி... என் மகனிடம் ஏற்பட்டிருக்கும் மாற்றம் நல்லதா, கெட்டதான்னு தெரியலையே...?” என்று குழப்பத்துடன் கேட்டார் சங்கரன்.

“அந்த சந்தேகத்தை காலத்தின் கையில் விடு சங்கரா... இதுதான் சரி, இது தவறு என்று நிலையானது எதுவும் உலகில் இல்லை. உனக்கு நல்லதாகத்

“

ஆரம்பத்தில் கல்லில் கடவுள் இருப்பதாக நம்பினீர்கள், இப்போது அந்த கல்லில் இல்லை என்று நம்புகிறீர்கள். இரண்டுமே உங்கள் பூசாரி என்ற கடமைக்கு தேவையில்லாத விஷயம். கல்லில்தான் கடவுள் இருக்கிறார் என்று நம்புவது எத்தனை தவறோ, அத்தனை முட்டாள்தனம் கல்லில் கடவுள் இல்லை என்பதும்...

”





## மந்திரச் சொல்

யாருக்காவது மிகப்பெரிய பரிசு கொடுக்க விரும்பினால், அவர் மனதில் நம்பிக்கையை விதையுங்கள்.

தோன்றும் மழை, பிளாட்பாரத்தில் வசிப்பவர்களுக்கு பெரும் கொடுமையாகத் தெரிவதில்லையா?”

கொஞ்சநேரம் அமைதியாக இருந்த சங்கரன், “சாமி... உங்களைத் தேடி மேல வரும்போது, நீங்க நொண்டிச் சாமியாருடன் பேசுனதா சொன்னாங்க, அவரைப் பத்தி உங்களுக்கு சரியா தெரியாது, அவர்...” என்று சொல்லத் தொடங்கியவரை பார்வையாலே நிறுத்தினேன்.

“‘நொண்டிச் சாமியாரைப் பற்றிச் சொல்லும் முன், நான் கேட்கும் மூன்று கேள்விகளுக்கு பதில் சொல் சங்கரா... நீ சொல்லப் போவது முழுமையான உண்மை என்பது உறுதியாகத் தெரியுமா?”

“அத்தனை உறுதியா சொல்ல முடியாது, ஆனா நெருப்பு இல்லாம புகையாதுங்களே...”

“சரி... நீ சொல்லப் போவது நல்ல விஷயமா அல்லது கெட்டதா?”

கொஞ்சம் தயங்கியபடி “கெட்டதுதான்” என்றார்.

“நீ சொல்லப் போவதால் எனக்கு அல்லது உனக்கு அல்லது அந்த நொண்டிச் சாமியாருக்கு ஏதாவது வகையில் நன்மை கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா?”

“இல்லை.... எனக்கோ, உங்களுக்கோ எந்த பிரயோஜனமும் இல்லை’’ என்று சொன்ன சங்கரனை தீர்க்கமாகப் பார்த்தேன்.

“யாருக்கும், எதற்கும் பயன்படாத ஒன்றை பேசத்தான் வேண்டுமா? கோள் சொல்வது பாவகரமான செயல்’’ என்று அழுத்தமாகச் சொன்னேன்.

“‘மன்னிச்சுக்கோங்க சாமி... ஏதோ புத்தி புரண்டு போச்சு. உங்களை மாதிரி அவர் இல்லையேங்கிற ஆதங்கத்துல பேசிட்டேன்’’ என்று முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டார்.

“சங்கரா... இந்த உலகில் மக்கள் துன்பம் அடைவதற்கு முக்கியக் காரணம் பிறரை ஒப்பிட்டுப் பார்ப்பதுதான். ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு கிடைத்ததும் சந்தோஷப்படும் மனிதன், தன் அருகே இருப்பவனுக்கு ஆயிரத்து நூறு என்றதும் துயரம் அடையத் தொடங்குகிறான். ஆயிரம் ரூபாயில் கிடைத்த சந்தோஷத்தை நூறு ரூபாயில் தொலைத்து விடுகிறான். இந்த துன்பத்துக்கு பாதை போட்டுக் கொடுப்பது பொறாமையும், தவறான வழிகளில் கூடுதல் சம்பளம் பெற்றுவிட்டான் என்று கோள் மூட்டுவதும்தான். இந்த இரண்டையும் தவிர்த்து, உன் சந்தோஷத்துக்கும், வருத்தத்துக்கும் நீ மட்டுமே காரணமாக இரு.”

“சரி சாமி..” என்றவர் மடியில் இருந்து பொடி எடுத்துப் போட்டார். நானும் கை நீட்டி வாங்கி சத்தம் போட்டு உறிஞ்சியபடி மரத்தடியில் சாய்ந்து வசதியாக உட்கார்ந்து கொண்டேன்.

“ஆரம்பத்துல பூஜை, அபிஷேகம் செய்யும்போது அக்கறையுடன், பக்தியுடன் செய்தேன். ஏதாவது தவறு நடந்து விட்டால் கடவுள் குற்றமாகிவிடும் என்று பயந்தேன். ஆனால் காலம் செல்லச்செல்ல கடவுள் மீது பயம் குறைந்து விட்டது. இப்போதும் கடவுளை நம்புகிறேன், ஆனால் நான் பூஜை செய்யும் சிலை மீது பயம் வரவில்லை. சிலையைத் தொடும்பொழுது வாயில் இருந்து மந்திரங்கள் வழிந்து கொண்டிருந்தாலும் பிரமிப்போ, சந்தோஷமோ வருவதில்லை. ஏன் இப்படி மாறிப் போனேன்?” என்றார்.

“நீங்கள் ஆரம்பத்திலும் தவறு செய்தீர்கள், இப்போதும் தவறு செய்கிறீர்கள்...”

“என்ன சாமி சொல்றீங்க?” கொஞ்சம் ஆச்சர்யமும் அதிர்ச்சியுடனும் கேட்டார் சங்கரன்.

“ஆரம்பத்தில் கல்லில் கடவுள் இருப்பதாக நம்பினீர்கள், இப்போது அந்த கல்லில் இல்லை என்று நம்புகிறீர்கள். இரண்டுமே உங்கள் பூசாரி என்ற கடமைக்கு தேவையில்லாத விஷயம். கல்லில்தான் கடவுள் இருக்கிறார் என்று நம்புவது எத்தனை தவறோ, அத்தனை முட்டாள்தனம் கல்லில் கடவுள் இல்லை என்பதும்...”

“புரியலையே...”

“உங்களது பணி ஆலயத்தைத் தேடி வருபவர்களுக்கு கடவுளை அறிமுகப் படுத்துவது. இதில் சொந்த விருப்பங்கள், எண்ணங்கள் குறுக்கே வரக்கூடாது. இத்தனை நாள்

www.gyaanaguru.com
www.gyaanaguru.com



கடவுளுக்கு பூஜைகள் செய்தும் நல்லதாக எதுவும் நடக்க வில்லையே என்ற வெறுப்பு உங்கள் மனதின் ஓரத்தில் வந்துவிட்டது'' என்று அவரையே கூர்ந்து கவனித்தேன்.

"ஆமாம் சாமி... காதோரம் நரைக்க ஆரம்பிச்சிடுச்சு. இன்னும் என் பொண்ணுக்கு கல்யாணம் முடிக்கலை. சொந்தமா ஒரு குடிசை கிடையாது. இத்தனை நாள் கடவுளுக்கு உண்மையா பூஜை செஞ்சதுக்கு..." என்று தடுமாறினார்.

"பூஜை செய்வதற்கு சம்பளம் வாங்கிக் கொண்டாய்... புத்திசாலித்தனமாக பூஜை தட்டில் விழுந்த காசு களையும் நீயே எடுத்திருந்தால், இன்னும் சிறப்பாகவே வாழ்ந்திருக்கலாம். உன்னுடைய முட்டாள்தனத்துக்கு கடவுளை ஏன் குறை சொல்கிறாய்?"

"நான் நேர்மையாக இருந்தது தப்பா...?"

''நேர்மையாக இருந்தது தப்பில்லை, அதற்கு பலனை எதிர்பார்க்கிறாயே அதுதான் தவறு..."

"இத்தனை வயசாச்சேன்னு பயமா இருக்கு..."

''தலை நரைத்துவிட்டதே என்று கவலைப்பட வேண்டாம். ஏனென்றால் நரைத்த தலை என்பது ஒரு கிரீடத்தை அணிந்திருப்பதைப் போன்றது. வயதான காலம் என்பது ஆசிர்வாதங்கள் நிறைந்த வாழ்வின் உச்சகட்டம். உன் வாழ்வின் ஏமாற்றங்களுக்கு முதுமையை காரணம் காட்டாதே. இப்போது உன்னை வருத்திக் கொண்டிருக்கும் திருமண செலவும், வீடு கட்டும் ஆசையும் முட்டாள்தனமானவை மட்டுமல்ல ஆடம்பரத்துக்கு உன்னை அடிமையாக்குபவை. திருமணம் எத்தனை எளிமையாக நடக்கிறதோ அத்தனை தூரம் அது, இல்லாதவர்களுக்கு நல்லது"

"என்ன சாமி... இப்படிச் சொல்றீங்க? ஹோமம் வளர்த்து, அம்மி மிதிச்சு, அருந்ததி பார்த்து, சடங்குகள் செஞ்சு, விருந்தினர்களை எல்லாம் ஒன்று கூட்டி விருந்து வைத்து சந்தோஷப்படும் கல்யாணத்தைப் போய் முட்டாள்தனம்னு சொல்றீங்க? எல்லோருடைய ஆசிர்வாதமும் இருந்தாத்தானே பொண்ணு நல்லா வாழமுடியும்?"

"அப்படி நடத்தப்பெறும் திருமணங்கள் எதுவுமே இதுவரை தோல்வியைத் தழுவியதில்லையா?"

என்ன பதில் சொல்வது என தெரியாமல் விழித்த சங்கரன், "வாழ்நாளில் ஒரே ஒரு முறை என்பதால், திருமணத்தை நல்லா கொண்டாட ஆசைப்படுறோம்."

"அதற்காக வரதட்சணை அல்லது கடன் வாங்கி பிரமாண்டமாகச் செலவு செய்யவேண்டும் என்று எந்த வேதமும் சொல்லவில்லையே. இறைவனைப் பொறுத்தவரை கற்பூரமும், நெய் ஆரத்தியும் ஒன்றுதான் என்பது தெரியாதா?"

இதில் சங்கரன் சமாதானம் அடையவிட்டாலும், "சரி சாமி... கோயில்ல வைச்சு தாலி கட்டினாலும் அது கல்யாணம்தான்கிறதை ஏத்துக்கிறேன். ஆனா, வீடு வேண்டாங்கிறீங்களே, நிரந்தரமா ஒரு வீடு இருக்கிறது எத்தனை பெரிய பலம்? உண்ணாமத் தின்னாம இருந்தாலும் வீட்டுக்குள்ள மானம், மரியாதையோட இருக்கலாமே?" என்றார்.

"நிரந்தர வீடா... அப்படின்னா?" என்று நான் சிரிக்க... புரியாமல் பார்த்தார் சங்கரன்.

**- வருவார் ஞானகுரு**

**மந்திரச் சொல்** | உங்கள் மனம் மாற்றம் அடையும்போது, உங்களைச் சுற்றிய நிகழ்வுகளும் மாறிவிடும்.







# கவித்துவம்

**அப்பாவோடு**
**இருந்து பார்த்த போது**
**எல்லாமே**
**எளிதாய் இருந்தது.**
**அப்பாவாக இருந்து**
**பார்க்கும் போதுதான்**
**எல்லாமே**
**அப்பாவால் தான்**
**எளிதாய் இருந்தது**
**என்பதே தெரிய வருகிறது.**

**- அ.சீனிவாசன்**

# ஒரே பாடலில் ஒட்டுமொத்த வாழ்க்கை தத்துவம்

அவரவர் வாழ்க்கையில் அவரவர் பெரியவர் திருக்குறளை உலகப் பொதுமறை என்று சொல்வார்கள். 1,330 குறள்களில் திருவள்ளுவர் கூறிவந்த வாழ்க்கைத் தத்துவத்தை ஒரே ஒரு பாடல் மூலம் அற்புதமாக விளக்கியிருக்கிறார் கணியன் பூங்குன்றனார்.

ஆனால் அவரது பாடலில் முதல் வரியான, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது மட்டுமே நம் மக்களுக்கு ரொம்பவும் பரீட்சயம். திருக்குறளை பாராட்டிப் பேசுவது போன்றும், மாணவர்களிடம் பரப்புவது போலவும் இந்த பாடலை பலரும் முன்னிறுத்தவில்லை என்பதால் இந்த பாடலின் அடர்த்தியும் முழுமையான தத்துவமும் இன்னமும் மக்களுக்கு முழுமையாகப் போய்ச் சேரவில்லை.

இதோ, அந்த முழு பாடல்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே, மின்னொடு
வானம் தண்துளி தலைஇ யானாது
கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

கொஞ்சம் ஆழ்ந்து படித்தால் இதன் அர்த்தத்தை அத்தனை பேரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். இந்த பாடலின் அர்த்தத்தைக் கேளுங்கள். ஒவ்வொரு வரியிலும் உலக மக்களுக்கான வாழ்க்கைத் தத்துவம் நிரம்பி வழிகிறது.

- எல்லா ஊரும் எனது ஊர் எல்லா மக்களும் எனக்கு உறவினர்களே என்று மனிதர்கள் எண்ணுதல் வேண்டும். உலக மக்கள் அனைவரும் உறவினர் என்ற எண்ணம் எழுந்து விட்டால் இங்கே பிரிவினைக்கு அவசியம் இல்லை.

- உங்களுக்கு வரும் தீமை என்றாலும் நன்மை என்றாலும் அது அடுத்தவரால் வருவதில்லை. அவற்றின் அடிப்படை காரணம் நீங்கள் மட்டுமே என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

- மனக் கவலையும் ஆறுதலும் மற்றவரால் கிடைப்பது இல்லை, மனம் பக்குவம் அடைந்து விட்டால் எந்த கவலையும் பக்கத்தில் நெருங்காது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

- இறப்பு என்பது இந்த உலகிற்கு புதிய தகவல் அல்ல. அது இயற்கையானது. எல்லோருக்கும் பொதுவானது.


- வாழ்க்கையில் ஏற்படும் இனிய நிகழ்வுகளைக் குறித்து பெருமகிழ்ச்சி கொள்ளவும் வேண்டாம். அதுபோலவே, துன்பம் வந்தால் வாழ்க்கையை வெறுக்கவும் வேண்டாம். இன்பமும் துன்பமும் இணைந்தே வாழ்க்கை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

- இந்த வானம் வெப்பமான மின்னல் தருகிறது. குளிர்ச்சியான மழை தருகிறது. கற்களைப் புரட்டிச் செல்லும் காட்டாற்று வெள்ளத்தில், முட்டிமோதிச் செல்லும் படகு போன்று துன்பங்களும் இன்பங்களுமாக வாழ்க்கை நகர்ந்துகொண்டே இருக்கும். இது வாழ்க்கையின் இயல்பு, எல்லோருக்கும் பொதுவானது என்ற மனத் தெளிவு அடையுங்கள்.

- இந்த தெளிவு வரப் பெற்றால், உயர்ந்த நிலையில் உள்ளவர்களைப் பார்த்து வியந்து நிற்கவும் வேண்டாம். சிறிய நிலையில் உள்ளவர் களைப் பார்த்து இகழ்வதும் வேண்டாம். அவரவர் வாழ்வில் அவரவர் பெரியவர் என்பது அடிப்படை.

ஒவ்வொரு வரியிலும் எத்தனை அடர்த்தியான தத்துவம் என்பதை ஆழ்ந்து யோசித்துப் பாருங்கள். கீதையிலும், புத்தர் போதனை களிலும் திருக்குறளிலும் வரும் அத்தனையும் இதில் அடக்கம்.







# திருட்டு கடவுள் குருட்டு பக்தி

சினிமா எனும் வாழ்க்கை

## மஹராஜ்

மதத்தின் பெயரைச் சொல்லி மனிதனை முட்டாள் ஆக்குவது ரொம்பவும் எளிது. அடுத்த ஜென்மத்தில் உனக்கு நன்மை கிடைக்கச் செய்கிறேன் என்று ஆசை காட்டினால் தன்னுடைய பணம், உழைப்பை அள்ளிக் கொடுப்பார்கள். சாமியார் விரும்பினால் மனைவியையும் மகளையும் சந்தோஷமாகக் கூட்டிக் கொடுப்பார்கள். பலி கேட்டால் பிள்ளையை வெட்டிப் போடுவார்கள். அதை பெருமையாகவும் நினைப்பார்கள்.

காலம் காலமாக நீடித்துக்கொண்டே இருக்கும் இந்த முட்டாள்தனத்தின் அடிப்படையில் நடந்த உண்மை சம்பவத்தை விவரிக்கிறது மஹராஜ் திரைப்படம்.

மதத்தின் பெயரைச் சொல்லி ஏமாற்றுவது பழைய காலத்தில் தான் சாத்தியம், இப்போது மக்கள் விழிப்புணர்வு பெற்றுவிட்டார்கள் என்று பேசுபவர்களை ஒருபோதும் நம்பாதீர்கள். ஏனென்றால், பிராமணர்கள் சாப்பிட்ட எச்சில் இலையின் மீது உருளும் சடங்கு தெய்வீகமானது என்று நீதிமன்றங்கள் இந்த ஆண்டு தான் தீர்ப்பு வழங்கியிருக்கின்றன. போலே பாபா காலடி மண் எடுப்பதற்குச் சென்று 120க்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆண்டு தான் பலியாகி இருக்கிறார்கள்.

மதத்தை இப்போதும் மக்கள் குருட்டுத்தனமாக நம்புகிறார்கள். அதனாலே, இந்து குருமார்கள், கிறிஸ்தவ பாதிரியார்கள், இஸ்லாம் போதகர்கள் என்று அத்தனை பேரும் அயோக்கியத்தனம் செய்து செல்வத்தில் செழிக்கிறார்கள். கடவுளுக்கும் மனிதர்களுக்கும் இணைப்புப் பாலம் என்று வருபவர்கள், ஒரு கட்டத்தில் தங்களையே கடவுள் என்கிறார்கள்.

ஞானகுரு
# மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ்
3 - 7

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586, 72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** www.gyaanaguru.com

www.gyaanaguru.com

> மதத்தின் பெயரால் காலம் காலமாக ஏமாற்று வேலை நடந்துகொண்டே இருக்கிறது. அப்படி ஆங்கிலேயர் காலத்தில் அதாவது 1862ம் ஆண்டு நீதிமன்றத்தில் தோலுரிக்கப்பட்ட ஒரு சீட்டிங் சாமியாரைக் காட்டியிருக்கிறது மஹாராஜ்.




அதையும் மனிதர்கள் ஏற்றுக்கொண்டு வழிபடுகிறார்கள்.

வனத்தை அழித்து ஈஷோ யோகா மையம் கட்டியிருக்கும் ஜக்கி வாசுதேவிற்கு மிகச்சிறந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் என்று விருது இப்போது வழங்கப்படுகிறது. அவர் வனத்தை அழித்தாரா இல்லையா என்பதை இன்னமும் அரசு ஆய்வு செய்யவில்லை என்று சட்டமன்றத்தில் பேசுவதும் இந்தக் காலம் தான்.

கோயிலுக்கு வரும்போது தலையை விரிச்சுப்போட்டு வர்றது தப்பு என்றும், பகவானை தரிசிக்கும்போது ஆண்கள் மேல் சட்டை அணியக் கூடாது என்று ஒரு மதம் இந்த காலத்தில் தான் தடை போடுகிறது. பெண்கள் தங்கள் உடம்பை ஆண்களுக்குத் தெரியாமல் மறைக்க வேண்டும் என்று ஒரு மதம் பெண்களுக்கு பாடம் எடுக்கிறது. தன் உடலில் கர்ப்பம் தரித்த பெண்ணுக்கு, அதனை அழிக்கும் உரிமை இல்லை என்று ஒரு மதம் இப்போதும் தடை போடுகிறது.

மதத்தின் பெயரால் காலம் காலமாக ஏமாற்று வேலை நடந்துகொண்டே இருக்கிறது. அப்படி ஆங்கிலேயர் காலத்தில் அதாவது 1862ம் ஆண்டு நீதிமன்றத்தில் தோலுரிக்கப்பட்ட ஒரு சீட்டிங் சாமியாரைக் காட்டியிருக்கிறது மஹாராஜ்.

இன்றைய நவீன சினிமாவுக்கு உரிய தரமான காட்சியமைப்பு, விறுவிறுப்பான திரைக்கதை, சிறப்பான காட்சியமைப்பு போன்றவை இல்லை என்றாலும், உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட கதை என்பதற்காகவும், மதத்தின் பெயரால் எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள் என்பதை புரிந்துகொள்வதற்காகவும் பார்க்க வேண்டிய பட்டியலில் இந்த படம் சேர்கிறது. ஒரு பொய்யை திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இருந்தால் அது உண்மையாகி விடும் என்பதற்கு உதாரணமாக வாழும் கடவுளாக ஜேஜே எனும் வைணவ மஹராஜ் இருக்கிறார். அவரை கிருஷ்ணரின் அவதாரம் என்றே மக்கள் நம்புகிறார்கள். கிருஷ்ணர் விக்கிரத்துக்குப் போலவே அவருக்கும் அபிஷேகம் நடக்கிறது. கிருஷ்ணருக்குப் போலவே அவருக்கும் ஆரத்தி காட்டப்படுகிறது. அவருடைய செல்வாக்கு காரணமாகவே அந்த ஊரில் செல்வம் கொட்டுகிறது என்று மக்கள் நம்புகிறர்கள். அத்தனை பேரும் அவரை கடவுளாகவே பாவிக்கிறார்கள்.

பாத பூஜை எனும் சடங்கை மஹராஜ் மிகவும் வெளிப்படையாகச் செய்கிறார். பாத பூஜை என்பது அவர் தேர்ந்தெடுக்கும் பெண்ணுடன் சல்லாபம் புரியும் சடங்கு. இந்த சடங்கில் மஹராஜூடன் சல்லாபிக்கும் வாய்ப்பு கிடைப்பதை பெண்கள் பெருமையாகக் கருதுகிறார்கள். தங்கள் வீட்டுப் பெண் பிள்ளைக்கு அந்த வாய்ப்பு கிடைப்பதை பெற்றோர்கள் இனிப்பு கொடுத்து கொண்டாடுகிறார்கள். பாத பூஜையில் பங்கேற்கும் பெண்ணும் அதை தனக்குக் கிடைக்கும் மிகப்பெரும் பாக்கியம் என்றே கருதுகிறாள்.

அதோடு, அந்த சடங்கை பணம் இருக்கும் மனிதர்கள் மாடத்தில் இருந்து வேடிக்கை பார்க்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஒரு பெண்ணின் கற்பை சூறையாடும் நிகழ்வை ஒரு புனிதமான பூஜை போன்று மக்களை ஏமாற்றி செய்துவருகிறான் மஹராஜ்.

எல்லாவற்றையும் கேள்வி கேட்கும் கர்ஸன் தாஸ் அந்த ஊரில் இருக்கும் அத்தை வீட்டுக்கு வருகிறான். படிப்பு முடிந்ததும் கிஷோரியை திருமணம் முடிப்பதற்குக் காத்திருக்கிறான். ஜாதியின் பெயரால் நடக்கும் கொடுமை, விதவை என்ற பெயரில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி போன்றவற்றை தட்டிக் கேட்கும் சீர்திருத்த எழுத்தாளனாக இருக்கிறான்.

இந்த நிலையில் ஜேஜேவுக்கு பாதபூஜை செய்வதற்கு கிஷோரி தேர்வு செய்யப்படுகிறாள். அதை மிகவும் பெருமையாகக் கருதுகிறாள். அன்றைய இரவு தன்னை ஜேஜேவுக்கு அர்ப்பணம் செய்கிறாள்.

அந்த தகவல் கேள்விப்பட்டு ஓடிவந்து படுக்கையறையில் இருக்கும் கிஷோரியை தடுத்து நிறுத்துகிறான். தன்னோடு வந்துவிடுமாறு அழைக்கிறான். இந்த பூஜையைத் தடுத்தால் நீ அடுத்த பிறவியில் மிருகமாகப் பிறப்பாய் என்று மாடத்தில் இருந்து வேடிக்கை பார்ப்பவர்கள் சத்தம் போடுகிறார்கள். ஆனாலும், கிஷோரியை அழைத்துச்செல்வதில் உறுதியாக இருக்கிறான். ஆனால், கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டதை பாக்கியமாகக் கருதும் கிஷோரி, அவனுடைய அழைப்பை ஏற்க மறுக்கிறாள். தான் செய்வது புண்ணியச் செயல் என்றும் என்னுடைய நம்பிக்கையில் தலையிடாதே என்றும் அவனை வெளியே விரட்டுகிறாள்.

படித்த பெண்ணான உனக்கு ஜேஜே உன்னை பயன்படுத்திக்கொள்வது புரியவில்லையா என்று கேள்வி



www.gyaanaguru.com



கேட்கிறான். அப்போதும் கிஷோரி ஜேஜே மீது பைத்தியக்காரத்தனமான பக்தியில் இருக்கிறாள்.

அடுத்த நாள் தன்னுடைய தங்கையை பாதபூஜைக்கு ஜேஜே தேர்வு செய்தது தெரிந்த பிறகே, இது கடவுளின் பெயரைச் சொல்லி பெண்களுக்கு திட்டமிட்டு இழைக்கப்படும் அநீதி என்பதை உணர்கிறாள். படித்திருந்தும் முட்டாள்தனத்தில் விழுந்ததை எண்ணி வருந்துகிறாள். கர்ஸனுடன் வாழ்வதற்கு தனக்கு அருகதை இல்லை என்று தற்கொலை செய்துகொள்கிறாள்.

அதோடு, மஹராஜ் இழைத்துவரும் கொடுமைகளை மக்களிடம் அம்பலப்படுத்துமாறும் வேண்டுகோள் வைக்கிறாள். பக்தியின் பெயரால் அப்பாவி மக்கள் எப்படியெல்லாம் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை கர்ஸன் எழுத நினைக்கிறான். ஆனால், பத்திரிகைகள் அச்சிட மறுப்பதால், அவனே பத்திரிகை தொடங்குகிறான்.

மஹராஜ் கடவுளின் பெயரைச் சொல்லி ஏமாற்றுவதை பத்திரிகைகளில் எழுதி அம்பலப்படுத்துகிறான். இதனால் கோபமாகும் மஹராஜ் 50 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தொடுக்கிறார். மன்னிப்பு கேட்டுக்கொண்டால் வழக்கை வாபஸ் வாங்குகிறேன் என்கிறார் மஹராஜ். வழக்கில் தோற்றுப் போனால் கட்டுவதற்கு என்னிடம் பணம் இல்லை. அதற்காக சிறையில் இருப்பேனே தவிர, மன்னிப்பு கேட்க மாட்டேன் என்பதில் உறுதியுடன் இருக்கிறான் ஹர்சன்.

அந்த வழக்கில் மஹராஜ்க்கு எதிராக சாட்சி சொல்ல முன்வந்தது யார்.? நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு கிடைத்தது என்பதை திரையில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

இந்த படத்தில் இந்தி சூப்பர்ஸ்டார் அமீர்கானின் மகன் ஜூனைத்கான் நாயகனாக அறிமுகமாகியிருக்கிறார். நடிப்பில் இன்னமும் ரொம்பவே முதிர்ச்சி தேவை. அழுத்தமான கதாபாத்திரத்திற்கு ஏற்ற நடிப்பு இல்லை என்பதாலே படத்தில் தொய்வு ஏற்படுகிறது. அதேநேரம், கிஷோரியாக வரும் ஷாலினி பாண்டே, மஹராஜாக வரும் ஜெய்தீப், காதலியாக வரும் சர்வாரி சிறப்பாகப் பங்களித்திருக்கிறார்கள்.

தன்னை கடவுளின் அவதாரமாக நம்ப வைப்பதற்கு பக்தர்களின் கைகளின் மீது ஜேஜே நடந்து வருவதும், நீதிமன்றத்தில் தனி சிம்மாசனம் போட்டு அமர்வதும், கீதையை சொன்னதே நான் தானே, நான் அதன் மீது சத்தியம் செய்ய வேண்டுமா என்று கேட்பதெல்லாம் பலே ரகம்.

சரியானகதையைஎடுத்துக்கொண்டுஇயக்கியிருக்கும் மல்கோத்ரா சித்தார்த், திரைக்கதையில் இன்னமும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால் அற்புதக் காவியமாக மலர்ந்திருக்கும். உண்மையை எந்த சக்தியாலும் மறைக்க முடியாது என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறது, மஹராஜ்.

அதேநேரம், ஆங்கிலேயர் ஆட்சி காலம் என்பதாலே மதத்தின் போர்வையில் மஹராஜ் செய்த அயோக்கியத் தனம் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டது. இன்றைய காலம் என்றால் மஹராஜிடம் பணம் வாங்கிக்கொண்டு அவரை ஏதேனும் ஒரு தேசத்துக்கு ஆட்சியாளர்கள் வழியனுப்பி வைத்திருப்பார்கள். நித்தியானந்தா வழியில் மஹராஜூம் ஏதேனும் ஒரு தேசத்தில் சுதந்திரமாகத் திரிந்திருக்கலாம். நமக்கு இப்படி ஒரு படம் கிடைத்திருக்காது.


அனைவரும் பார்க்க வேண்டிய படமல்ல, பாடம்.

**மந்திரச் சொல்**


உங்களைப் பற்றி பிறர் எவ்வளவு அறிந்துகொள்ள வேண்டுமோ, அதைவிட குறைவாகச் சொல்லுங்கள்.

www.gyaanaguru.com






www.gyaanaguru.com




**?ஆகமவிதிகளுக்கு எதிராக இந்து கோயில்களில் ஷீரடி சாய்பாபாவுக்கு சிலை அமைக்கப்படுகிறதே.. இது தவறு தானே..?**

**- சி.கிருஷ்ணராஜன், தேவகோட்டை.**

**ஞானகுரு :**

இது வரை இந்து மதம் நிறைய மதங்களை விழுங்கி ஏப்பம் போட்டிருக்கிறது. மகாவீரர், புத்தரை எல்லாம் விஷ்ணுவின் அவதாரம் என்று ஒரு கதை கட்டினார்கள். புத்தர் கோயில் சிற்பங்களை எல்லாம் இந்து கடவுளாக மாற்றினார்கள். அப்போது எந்த ஆகமமும் குறுக்கே வரவில்லை. இப்போது சாய்பாபா சிலை வைப்பதில் ஆகமம் மீறிவிட்டதாக கதறுகிறார்கள்.

உண்மையில், எந்த ஒரு மனிதரும் கடவுளாக முடியாது. கடவுள் அவதாரமாக தன்னை சொல்லிக் கொள்பவர்களும் போலிகளே என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆகவே, சாய்பாபா ஒருபோதும் கடவுள் இல்லை.

சாய்பாபாவுக்கு தனியே கோயில் கட்டியிருந் தார்கள். அங்கே வரும் பக்தர்கள் எண்ணிக்கையைப் பார்த்து, பிரமித்து, அந்த கும்பலை தங்கள் கோயிலுக்குள் இழுத்து, சாய்பாபாவுக்கு இந்து கோயிலில் சமாதி கட்ட நினைத்தார்கள். ஆனால், வேறு மாதிரி நடக்கிறது. சிவன், பார்வதி, முருகன், பார்த்தசாரதியை விட சாய்பாபா சந்நிதிக்கு வியாழக்கிழமைகளில் கூட்டம் அதிகம் வருகிறது.

இதனால், இந்து கடவுள்களுக்கு மதிப்பும் மரியாதையும் குறைந்துவிடும் என்ற பயம் இந்து முன்னணி உள்ளிட்ட இந்து அமைப்புகளுக்கு வந்துவிட்டன. அதனாலே இப்போது துடிக்கிறார்கள்.

சாய்பாபா ஒரு முஸ்லீம் என்பதை நினைவூட்டுவதற்காக குரான் படிக்கப்படுகிறது என்று ஒரு சர்ச்சை கிளப்புகிறார்கள். மத நல்லிணக்கத்தைக் கடைப்பிடிப்பதற்காக மகாத்மா காந்தி டெல்லி வால்மீகி கோயிலில் குரான் ஓதுவதற்கு முயற்சி எடுத்தார். அதனாலே இந்து தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். சாய்பாபா, காந்தி ஆகியோர் மத நல்லிணக்கத்துக்கு ஆசைப்படலாம். ஆனால், இந்து அமைப்புகள் அப்படி விரும்ப மாடார்கள். அதனாலே ஆகமத்தைக் காட்டி சாய்பாபா சந்நிதிக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

ஒவ்வொரு சந்நிதிக்கு முன்பு உண்டியல் வைப்பதற்கும், ஸ்பெஷல் தரிசனக் கட்டணத்திற்கும் எந்த ஆகமமும் இடம் கொடுக்கவில்லை. ஆனால் அதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிப்பதில்லை.

இந்து கோயில்களில் பாலின ஆர்வம் தூண்டும் சிற்பங்களும், யானை, புலி, முதலை என்று விதவிதமான சிற்பம் வைப்பதற்கு இடம் கொடுக்கும் ஆகம விதிகள் சாய்பாபா சந்நிதிக்கு மட்டும் எதிர்ப்பு தெரிவிக்கிறது என்றால், இந்து மதம் பயப்படுகிறது என்று அர்த்தம். வருமானம் பறிபோகிறது என்ற அச்சம் வருகிறது. அதனாலே எதிர்க்கிறார்கள். அதுசரி, சாய்பாபாவுக்கு நிறைய சக்தி இருப்பதாக அவரது பக்தர்கள் நம்புகிறார்கள். அப்படி அவருக்கு சக்தி இருந்தால் இந்துக்களிடம் இருந்து அவரை காப்பாற்றிக் கொள்ளட்டும்.

---

**?அகம்பாவம் மனிதனுக்கு எப்போது வருகிறது, ஏன்..?**

**- ஜி.சோலையம்மாள், பொள்ளாச்சி**

**ஞானகுரு :**

அழகு விஷயத்தில் பெண்களும் செல்வாக்கு விஷயத்தில் ஆண்களும் அகம்பாவம் கொள்கிறார்கள். தங்களைவிட அழகும், பணமும் உள்ள மனிதர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்ற உண்மையை உணராத அறியாமை அகம்பாவம் தருகிறது.

எந்த வகையிலும் தான் மட்டும் உயர்ந்தவன் இல்லை, பிறர் தாழ்ந்தவர் இல்லை என்ற எண்ணமே நிம்மதியும் மகிழ்ச்சியும் தரும். தனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வெற்றியையும் குழு வெற்றியாகக் கருதுவதே அகம்பாவம் அகற்றும் வழி. ஓட்டப் போட்டியில் ஒரு வீரர் வெற்றி பெறுகிறார் என்றாலும், பயிற்சியாளரின் வழிகாட்டுதல், சத்தான உணவு, பார்வையாளர்களின் வரவேற்பு, அன்றைய மனநிலை, சுற்றுச்சூழல் போன்ற பல்வேறு காரணிகள் சாதகமாக அமைய வேண்டும். அகக் காரணிகள் புறக் காரணிகள் எல்லாம் சேர்ந்ததே வெற்றி, தனித்து தான் ஒன்றுமே இல்லை என்ற உண்மையைப் புரிந்துகொள்பவர் எல்லா நேரத்திலும் நிதானமாக இருப்பார்.

www.gyaanaguru.com



# ஞானகுரு பதில்கள்

**?நான் ஓரளவுக்கு நன்றாக சம்பாதிக்கிறேன். நல்ல சேமிப்பு இருக்கிறது. ஆனால், எனக்கு ஆடம்பரமாகச் செலவழிப்பதற்கு மனம் வரவே இல்லை. என் மனம் ஏன் இப்படி இருக்கிறது..?**

**- சி.ஹரீஸ்குமார், நெல்லை.**

**ஞானகுரு :**

மிகவும் சிரமப்பட்டு பணம் சம்பாதித்த நபர்களுக்கு, அந்த பணத்தை தேவையின்றி செலவழிப்பதற்கு மனம் வருவதில்லை. உங்களுக்கு நன்றாக செலவழிக்கும் மனநிலை வர வேண்டும் என்றால் புரோன்னி வேர் எழுதிய, 'தி டாப் ஃபைவ் ரிகரெட்ஸ் ஆஃப் டையிங்' என்ற புத்தகம் படித்துப் பாருங்கள்.

முதியவர்களுக்கு நர்ஸாக இருந்த புரோன்னி, மரணத்தருவாயில் இருந்த நோயாளிகளிடம் பேசியதைத் தொகுத்து எழுதப்பட்ட புத்தகம். அவர்கள் அதிகம் வருத்தப்பட்ட ஐந்து விஷயங்கள் இவை.

- நான் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இன்னும் கொஞ்சம் நேரம் ஒதுக்கியிருக்கலாம்.
- என் நண்பர்களுடன் தொடர்பில் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.
- என்னுடைய விருப்பத்தை தைரியமாக சொல்லியிருக்கலாம்.




- இத்தனை கஷ்டப்பட்டு நான் உழைத்திருக்கத் தேவையில்லை.
- மற்றவர்களுக்காக வாழாமல் எனக்காகவும் கொஞ்ச நாட்கள் வாழ்ந்திருக்கலாம்.

மரணத் தருவாயில் யாரும் பொய் சொல்வதற்கு அவசியம் இல்லை. இவர்கள் அனைவரும் நன்றாக சம்பாதித்து அதனை அனுபவிக்க முடியாமல், தங்கள் மனதில் இருக்கும் ஆசையை வெளிக்காட்ட முடியாமல், மற்றவர்களுக்காகவே வாழ்ந்தவர்கள். இனியாவது, உங்கள் ஆசையை நிறைவேற்றுவதற்காகவும் வாழுங்கள். நீங்கள் சம்பாதித்த பணத்தை செலவழிப்பதில் எந்த குற்றவுணர்வும் வேண்டியதில்லை.

---



**?தாய், தந்தை பிள்ளை என குடும்பம் எவ்வாறு உருவாகியிருக்கும்?**

**- எஸ்.கந்தசாமி, மேட்டூர்**

**ஞானகுரு :**

எதிரிகளிடம் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வாழும் நிலை உருவானது. ஒவ்வொரு கூட்டமும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக குடும்பம் என்ற அமைப்பு உருவானது. ஆனால், இந்த குடும்பம் என்பது ஒரு தற்காலிகப் பாதுகாப்பு மட்டுமே. யாரும் யாருக்கும் நிஜமான சொந்தம் இல்லை என்பதே உண்மை. இந்த வார்த்தையில் சந்தேகம் இருந்தால் உங்களை சுற்றிலும் உற்றுப் பாருங்கள். அப்பா, அம்மா, பிள்ளை, அண்ணன், தம்பி செத்துவிட்டதற்காக, தங்கள் உயிரைக் கொடுத்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா..? வீடு வரை உறவு. அந்த வீடு தான் குடும்பம்.

---

**?அதிகாரமும் பதவியும் ஆணவத்தைத் தூண்டுமா..?**

**- எம்.பாண்டித்துரை, குலசை**

**ஞானகுரு :**

பயப்படும் மனிதர்கள் இருக்கும் வரையிலும் அதிகாரிகள் ஆட்டம் போடத்தான் செய்வார்கள். பதவிக்கு வந்ததும் யூனிஃபார்ம் அணிந்ததும் தங்களுக்குப் பின்னே ஒளிவட்டம் சுற்றுவதாக நினைத்துக் கொள்கிறார்கள். முதுமை எல்லா ஆணவத்தையும் அடக்கிவிடும்.



www.gyaanaguru.com

**? நான் எதற்காக படைக்கப்பட்டேன் என்பதே புரியவில்லை. தோல்வி, பிரச்னைகள், சிக்கல்கள், அழுகை, கண்ணீர் இவ்வளவுதான் வாழ்க்கையா..?**

**- கே.மகேஸ்வரி, காரைக்குடி.**

**ஞானகுரு :**

என்ன காரணத்துக்காக உயிர்கள் படைக்கப்பட்டன என்ற கேள்விக்கு அறிவியலிலும் ஆன்மிகத்திலும் சரியான விடை கிடையாது. ஆனால், மனிதர்கள் வாழத்தான் வேண்டும். மனிதர்கள் நிர்வாணமாக இந்த உலகிற்கு வருகிறார்கள், நிர்வாணமாகவே செல்வார்கள். பிறக்கும்போது தானே எந்த செயலும் செய்ய முடியாத அளவுக்கு பலவீனமாக இருக்கிறார்கள். முதுமையிலும் அதே நிலைக்குச் செல்கிறார்கள். பணம், பொருள், புகழ் எதுவும் இல்லாமல் பிறப்பது போன்று இந்த உலகில் சம்பாதித்த அத்தனையை யும் விட்டுச் செல்கிறார்கள். அவ்வளவு தான் வாழ்க்கை. ஆனால், ஒருவருக்கு என்ன கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதில் இன்பமாக வாழ முடியும் என்பதே உண்மை. அப்படித் தான் அத்தனை உயிரினங்களும் வாழ்ந்துகொண்டு இருக்கின்றன. தொட்டியில் இருப்பதற்காக எந்த மீனும் வருத்தமாக இருப்பதில்லை. கடலில் துள்ளுவது போலவே தொட்டியிலும் துள்ளுகின்றன. மனிதன் மட்டுமே தன்னிடம் எதுவுமே இல்லை, அக்கம்பக்கத்தில் நிறைய இருக்கிறது என்று பொறாமை, வெறுப்பு, ஆதங்கத்துடன் வாழ்கிறான். நூறு ரூபாய் சம்பாதிப்பவன் அதற்குள் வாழப் பழகினால் அவனைவிட எந்த கோடீஸ்வரனும் உயர்ந்தவர் இல்லை. என்ன இருக்கிறதோ, அவற்றில் மகிழ்ச்சியைக் கண்டுபிடியுங்கள். இந்த பூமியில் குறைந்த காலமே மனிதர்கள் வாழ்கிறார்கள். எனவே, கோபம், சண்டை, பிரிவு, வலி போன்றவைகளை எளிதாக எடுத்துக்கொள்ளப் பழகுங்கள். எல்லாவற்றையும் கொண்டாடும் மனநிலையை வளர்த்துக் கொள்ளுங்கள். வாழ்க்கை மகிழ்ச்சியாக வாழ்வதற்கே.






**? ஞானகுருவுக்குப் பிடித்தது எது, பிடிக்காதது எது?**

**- எஸ்.சுந்தரராஜன், சென்னை**

**ஞானகுரு :**

பிடிக்காத ஒன்று பிடித்தமானதாக மாறுவதும், பிடித்த மானது பிடிக்காததாக மாறுவதுமே வாழ்க்கை. அதனால், எந்த ஒன்றின் மீதும் பிடிவாதமாக இருப்பதில்லை.



**? சனீஸ்வரர் சங்கடம் தீர்ப்பவரா, சங்கடம் தருபவரா..?**

**- ஏ.மாடசாமி, திருச்சி.**

**ஞானகுரு :**


கடவுள் என்று இருந்தால் அவர் சங்கடம் தருபவராக இருப்பாரா? அப்படி சங்கடம் தருகிறார் என்றால் அவர் கடவுளாக இருக்க முடியுமா? தீதும் நன்றும் பிறர் தர வாரா என்று கனியன் பூங்குன்றனார் சொல்வதை மட்டும் கேளுங்கள். கடவுள்களை விட்டுத் தள்ளுங்கள்.

**? காப்பிரைட்ஸ் என்றால் என்ன, அது நல்லது தானா?**

**- டி.வள்ளியம்மாள், வடவள்ளி**


**ஞானகுரு :**

வெற்றி பெற்ற எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், தொழிலதிபர்கள், கலைஞர்கள் தங்கள் திறமைக்கு தாங்கள் மட்டுமே காரணம் என்று நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட அசட்டு நபர்கள் மட்டுமே காப்பிரைட்ஸ் என்பதில் பிடிவாதமாக இருக்கிறார்கள். நெருப்பைக் கண்டு பிடித்தவரும், சக்கரத்தை கண்டுபிடித்தவரும் அப்படியெல்லாம் நினைத்திருந்தால் என்னவாகும்? எந்த ஒருவரும் தனிப்பட்ட முறையில் எந்த ஒன்றையும் கண்டு பிடித்துவிட முடியாது, சாதிக்கவும் முடியாது. நிறைய விஞ்ஞானிகள் தோல்வியடைந்த பரிசோதனைகளை மேற்கொண்டே எடிசன் பெரிய விஞ்ஞானியாக மாறினார். எனவே, யார் யாரோ போட்ட ரோட்டில் பயணம் செய்வது போலவே அனைத்துக் கண்டுபிடிப்புகளைக் கருத வேண்டும்.







# கவித்துவம்

ஆற்றுக்கும்
மணலுக்குமான
தொப்புள்கொடி நீள்கிறது
அள்ளிச் செல்லும்
லாரியின்
கதவிடுக்கில்!

- ந.சிவநேசன்



# மிருகத்தைப் பலி கொடுத்தால் அல்லா சொர்க்கம் தருவாரா..?

மிருகத்தைப் பலி கொடுப்பது எல்லா மதங்களிலும் இருக்கத்தான் செய்கிறது. குல தெய்வ கோயிலில் மிருகத்தைப் பலி கொடுக்கவில்லை என்றால் சாமி கோபமாயிடும் என்று நம்புகிறார்கள். அப்படித் தான் மிருகத்தைப் பலி கொடுத்தால் அல்லா சொர்க்கம் தருவார் என்று சிலர் நம்புகிறார்கள்.

உயிர்களை கொலை செய்யக் கூடாது என்று யாரும் சொல்ல முடியாது. ஏனென்றால், ஒன்றை யொன்று தின்று வாழும்படியே உயிர்கள் வாழ்க்கை முறை அமைந்திருக்கிறது.

உயிர்கள் என்றால் வளரும், வாழும் எல்லாமே உயிர்கள் தான். செடிகளுக்கு வலிப்பதில்லை, அவை தானாக கனி கொடுக்கின்றன, அவற்றை நாம் பயன்படுத்தவில்லை என்றால் அவை வீணாகிவிடும் என்று மனிதன் சொல்வது நிச்சயம் நியாயம் இல்லை.

எந்த பயிரும் தானே முன்வந்து மனிதனுக்கு கனியைத் தருவதில்லை, மனிதனே பறித்துக்கொள்கிறான். எந்த பசுவும் தானே முன்வந்து பால் தருவதில்லை, மனிதன் பறித்துக்கொள்கிறான். மனிதன் குடிக்கும் தண்ணீரிலும் சாப்பிடும் உணவிலும் கோடிக்கணக்கான உயிரினங்கள் இருக்கின்றன.

உயிர் என்றால் எல்லா உயிரும் சமமே. ஒரு கொசுவின் உயிரும், ஒரு கோழியின் உயிரும், ஒரு மனிதனின் உயிரும் சமமானதே. எனவே, எல்லா மனிதரும் பிற உயிர்களைக் கொன்று தின்றே வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

அதேநேரம், உயிர்களைக் கொல்வதற்கு ஒவ்வொருவரும் தங்களுக்கென்று சில நியாயங்கள் கற்பித்துக்கொள்கிறார்கள்.

கடவுளுக்கு மனிதர்களைப் பலி கொடுப்பது எல்லா மன்னர்கள் காலத்திலும் நடந்திருக்கிறது. சாமிகளின் பெயரில் நடந்திருக்கிறது. அல்லாவின் பெயரிலும் நடந்திருக்கிறது. இயேசுவின் பெயரிலும் நடந்திருக்கிறது.

பக்ரீத் பண்டிகையும் ஒரு பலி பண்டிகை. அல்லா என்ற அரேபிய கடவுளுக்கு தன் மகனை பலி கொடுக்க முற்படுகிறான் இப்ராஹிம்.

அதை கண்டு நெகிழ்ச்சியடையும் அல்ல, ‘நீ மிகவும் அன்பு வைத்திருக்கும் உன் மகனையே எனக்கு பலியிட துணிந்து விட்டதால் உனக்கு சொர்க்கத்தில் இடம் தருகிறேன். எனக்கு நீ ஆட்டுக்குட்டியை பலி கொடுத்தால் போதும்’ என்கிறார். இதையொட்டி பண்டிகை கொண்டாடுகிறார்கள்.


குல தெய்வத்திற்கு சாமியாடுபவர்கள், ‘ஆத்தா பசியா இருக்கா... அஞ்சு ஆடு பலி கொடு’ என்று கூறுவதுண்டு. மனிதன் சாப்பிடுவதற்கு விரும்புகிறான், அதற்கு கடவுளை பயன்படுத்திக் கொள்கிறான்.

இந்த உலகை கடவுள் படைத்தார் என்றால், எல்லா உயிர்களையும் கடவுளே படைத்தார் என்றால், அவர் ஒன்றையொன்று தின்று வளரும் படி வைத்திருப்பாரா... அப்படி என்றாலும் தான் படைத்த உயிரையே தனக்கு பலியாகக் கேட்பாரா..?

கொலை செய்யுங்கள், உண்ணுங்கள். ஆனால், கடவுளுக்கு என்று எதற்கு பொய் சொல்கிறீர்கள்..?

பசு பால் கொடுக்கிறது, காகம் வடை திருடுகிறது என்று இன்னும் எத்தனை காலம் மனிதனை மனிதன் ஏமாற்றிக்கொண்டே இருப்பது..?

www.gyaanaguru.com




## ஆழ்மனமே தாழ் திறவாய்!

**அத்தியாயம்-30**

கௌதம புத்தரை ஆழ் மனதுக்குள் குடியமர்த்தினால் அனைத்து குழப்பங்களுக்கும் விடை கிடைத்துவிடும் என்பது உண்மை என்றால், அவருக்குப் பதிலாக நம் பெற்றோரை மனதில் அமரவைக்கலாமே அல்லது நமக்குப் பிடித்த கடவுளை கொண்டுவரலாமே என்று கேள்வி வரலாம்.

கடவுளை மனதுக்குள் கொண்டுவந்தால் அந்த மதத்தின் சித்தாந்தங்களை முழுமையாக ஏற்க வேண்டியிருக்கும். அதாவது ஒரு தோல்வி நிகழும்போது, ‘இதெல்லாம் உன் முற்பிறவி பயன்’ என்று வேதம் சொல்லித் தரும்.

இப்படி அவநம்பிக்கை விதைக்கும் கடவுள் சொல்படி நடக்கத் தொடங்கினால் மேற்கொண்டு முயற்சி எடுப்பதற்கு மனம் வராது. நமக்கு விதிக்கப்பட்டது இவ்வளவுதான் என்று இருப்பதை ஏற்றுக்கொண்டு வாழத் தொடங்கிவிடுவார்கள். அதேநேரம், நாம் ஆசைப்பட்டது கிடைக்கவில்லை என்ற கவலை மட்டும் வாழ்நாள் முழுவதும் அவர்களிடம் தேங்கி நிற்கும்.

பெற்றவர்கள் நிச்சயம் பிள்ளைக்கு நல்ல வழி மட்டுமே காட்டுவார்கள் என்பதில் ஐயமே இல்லை. ஆனால், அவர்களை மனதுக்குள் குடியமர்த்துவதும் ஆபத்து. ஏனென்றால், பெற்றோருக்கு மனம் பற்றி புரிதல் இருப்பதற்கு வாய்ப்பில்லை. மேலும், பின்பற்றிய பல்வேறு வழிமுறைகளை நம்மை அறியாமலே பின்பற்றத் தொடங்கிவிடுவோம். இப்படியொரு பிரச்னை வந்த நேரத்தில் என் அம்மா என்ன செய்தார், அப்பா என்ன செய்வார் என்று அவர்கள் கோணத்தில் பார்க்கத் தொடங்கிவிடுவோம். மேலும் ஒரு நண்பனிடம் பேசுவது போன்று மனம் திறந்து பெற்றோரிடம் பேச முடியாது.

எனவே, நம் மனதுக்குத் தேவை ஒரு நல்ல நண்பன். ஆகவே, எந்த கோட்பாடுகளிலும் சிக்கியிராத புத்தரை முதலில் மனதுக்குள் கொண்டுவாருங்கள். புத்தரை நண்பராக்கி பல்வேறு கேள்விகள் கேட்டு விடை கிடைத்த பிறகு தேவை என்றால் மேலும் ஒருவரை அல்லது சிலரை நண்பராகக் கொண்டுவாருங்கள். அதுவரையிலும் புத்தரே போதும்.

நம் மனதுக்குள் இருக்கும் புத்தருடன் தினமும் காலையில் கொஞ்ச நேரமும் இரவில் படுக்கப்போகும் போது கொஞ்ச நேரமும் கண்டிப்பாகப் பேச வேண்டும். புத்தருடன் பேசுவது என்றால் கேள்விகளைக் கேளுங்கள்... அதற்கான பதிலை நீங்களே புத்தராக இருந்து சொல்லிக்கொள்ளுங்கள். அந்த பதிலில் இருந்து கேள்வி கேளுங்கள். தெளிவு கிடைத்ததும் செயலில் இறங்கலாம்.

பகல், இரவு மட்டுமல்ல உங்களுக்குக் குழப்பம் வரும் ஒவ்வொரு நேரத்திலும் புத்தரிடம் கேள்வி கேளுங்கள். தெளிவு வரும் வரையிலும் கேள்வி கேளுங்கள்.

இந்த பிரபஞ்சத்திலுள்ள அத்தனை கிரகங்களையும் விழுங்கிவிடும் சக்தி கொண்ட கருந்துளை பற்றி அறிவியலில் படித்திருப்பீர்கள். அப்படியொரு கருந்துளை ஒவ்வொரு மனிதரிடமும் இருக்கிறது. அதுவே, மனம்.

மனம் என்றாலே பேராசை. மனதுக்கு எத்தனை

www.gyaanaguru.com
www.gyaanaguru.com

கொடுத்தாலும் போதவே போதாது. இன்னும் இன்னும் என்று கேட்டுக்கொண்டே இருக்கும். நல்ல வேலை, நல்ல சம்பளம், அழகான துணை, அடங்கிநடக்கும் பிள்ளைகள், நல்ல ஆரோக்கியம், நிறைய செல்வம் என்று கொடுத்தாலும் இன்னும் புகழ் வேண்டும், நீண்ட ஆயுள் வேண்டும் என்று எதையாவது மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டே இருக்கும். பேராசையே மனதின் இயல்பு என்பதை புரிந்துகொண்டவர்களால் மட்டுமே, அதனை தாண்டி அடுத்த கட்டத்திற்குச் செல்ல முடியும்.

வாக்கிங் செல்லும் வழியில் ஒரு அழகான பங்களாவை பார்க்கிறீர்கள். அந்த பங்களாவைச் சுற்றி பூத்துக் குலுங்கும் மலர்களுடன் கூடிய தோட்டம் இருக்கிறது. உடனே, ‘இப்படியொரு பங்களாவில் வாழ்ந்தால் சுகமாக இருக்கும்’ என்று மனம் ஆசைப்படும். இது, எல்லோருடைய வாழ்விலும் நடக்கும் விஷயம் தான்.

நல்ல அழகான பங்களா என்று அதனை ரசித்துப் பார்த்துவிட்டு நகர்வதற்கும், இப்படியொரு பங்களா நமக்கு வேண்டும் என்று ஆசைப் படுவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இது பேராசையா அல்லது தேவையா என்பதை மனதிலிருக்கும் புத்தரிடம் கேட்கலாம்.

எந்த ஒரு ஆசையையும் அப்படியே நிராகரிக்கத் தேவையில்லை. அது கிடைத்தால் எப்படிப்பட்ட அனுபவம் கிடைக்கும் என்று யோசிக்கலாம். எத்தனை அழகான தோட்டம் என்றாலும் அங்கு தினமும் சில நிமிடங்களே செலவழிக்க முடியும். எத்தனை பெரிய பங்களா என்றாலும் ஏதேனும் அறைக்குள் ஒரு கட்டிலில் தான் படுத்து உறங்க முடியும்.

பங்களா மெத்தையில் படுப்பவருக்கு ஸ்பெஷல் தூக்கமும், ஒரே கட்டிலும் நான்கு பேராக படுப்பவருக்கு சாதாரண தூக்கமும் கிடைப்பதில்லை. எல்லோருக்கும் ஒரே மாதிரியான சுகமான தூக்கமே கிடைக்கும். எனவே, அப்படியொரு பங்களா வாங்குவதற்கு நம்முடைய உழைப்பையும் சிந்தனையையும் செலவழிக்க வேண்டுமா, இல்லையா என்ற தெளிவு கிடைத்துவிடும்.

நான் சேர்த்து வைத்திருக்கும் பணத்தினால் எனக்குக் கிடைக்கும் இன்பத்தை விட, இந்த பங்களாவை வாங்கினால் கூடுதல் இன்பம் கிடைக்கும் என்று நினைத்தால் கண்டிப்பாக புத்தர் அனுமதி கொடுப்பார். அதுவே, இப்போதுள்ள வீட்டை விற்றுவிட்டு, கடன் வாங்கி இந்த பங்களாவை போன்று கட்டலாம் என்று ஆசைப்பட்டால் அனுமதிக்க




www.gyaanaguru.com



## மந்திரச் சொல்

சுற்றியுள்ள மனிதர்களிடம் குற்றம் பார்க்கத் தொடங்கினால், இந்த உலகில் தனி மனிதராக வாழ வேண்டியிருக்கும்.

மாட்டார். அதனால் வரும் பின்விளைவுகளை வரிசையாக எடுத்துச் சொல்வார். அதன் பிறகு முடிவு எடுக்க வேண்டியது நீங்கள் தான்.

இப்படி, பங்களா மட்டுமல்ல எந்த ஓர் ஆசையையும் மனதுக்குள் அனுபவித்துப் பார்த்து, அலசிப் பார்த்து அதன்பிறகு தேவை அல்லது தேவையில்லை என்ற முடிவுக்கு வந்துவிட முடியும்.

நான் பெரும் செல்வந்தராக, கோடீஸ்வரராக மாற விரும்புகிறேன். இந்த குறிக்கோளை அடைவது கடினம் என்று தெரிந்தாலும் அந்த பாதையில் மகிழ்ச்சியுடன் பயணிப்பேன் என்ற சிந்தனையில் இருப்பவர்களுக்கு புத்தர் கண்டிப்பாக அனுமதி கொடுப்பார். இடையூறுகளையும், தடைகளையும் தாங்கிக்கொள்ளும் மனம் கொடுப்பார். எத்தனை செல்வம் சம்பாதித்தாலும் மூன்று வேளை தான் சாப்பிட முடியும், ஒரு வீட்டில் தான் தூங்க முடியும். எனவே, எனக்கு இந்த வேலையே போதும் என்ற நிம்மதிக்கு ஆசைப்படுபவருக்கும், இது, சரியான முடிவு என்று தட்டிக் கொடுப்பார்.

புத்தர் செல்வந்தராகவும், பிச்சாண்டியாகவும் இருந்து வாழ்க்கையைக் கணித்தவர். எனவே, அவரது பார்வை வித்தியாசமாகவும் அதேநேரம் உண்மையாகவும் இருக்கும்.

அதாவது, சம்பளத்துக்கு வேலை செய்யும் ஒருவரால் ஒருபோதும் பெரும் செல்வந்தர் ஆக முடியாது என்ற உண்மையை நெற்றிப்பொட்டில் அடித்துப் புரியவைப்பார். கோடீஸ்வரனாக ஆசைப்படுபவர் என்றால் வேலை என்ற வேலியை உடைத்துக்கொண்டு வெளியே வந்தால் மட்டுமே அடுத்த படியில் அடியெடுத்து வைக்க முடியும். சம்பளக் கவரும் வேண்டும் கோடீஸ்வரராகவும் வேண்டும் என்று ஆசைப்படுபவர்களுக்கு, அது முடியவே முடியாது என்பதை புரிய வைப்பார்.

பணம் பற்றிய புரிதல் இல்லாமல் சிலர் செல்வந்தராக ஆசைப்படுவதுண்டு. அதாவது நமக்குத் தெரிந்த மக்கு நண்பன் ஒருவன் திடீரென கோடீஸ்வரனாகிவிட்டார், என்னுடைய உறவினர் ஏதோ தொழில் செய்து செல்வந்தராகிவிட்டார் என்றெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து அதற்காக முயற்சி செய்வார்கள். இவர்கள் தோல்வியே அடைவார்கள். ஏனென்றால், இந்த உலகில் யாருமே அதிர்ஷ்டத்தால் மட்டும் வெற்றி பெறுவதில்லை. அவர்கள் கனவினை அடைவதற்கு கடுமையாக உழைத்திருப்பார் கள். எனவே, அடுத்தவர் களைப் பார்த்து பொறாமைப்படுவது நிச்சயம் தோல்வியைக் கொடுத்துவிடும்.

பணத்தை விட நீங்கள் சேர்க்க வேண்டிய முக்கியமான செல்வம் உடல் ஆரோக்கியம் என்பதை சொல்லிக்கொடுப்பார் புத்தர். உடல் ஆரோக்கியம் என்ற செல்வம் இருந்தால் மட்டுமே மற்ற எந்தவொரு செல்வத்தையும் உங்களால் அனுபவிக்க முடியும். இல்லையென்றால், ‘பணம் இல்லாதப்ப நிறைய சாப்பிட ஆசைப்பட்டேன், கிடைக்கல. இப்போ பணம் இருக்கு, சாப்பிட எல்லா உணவும் இருக்குது. ஆனால், நோயினால் சாப்பிட முடியாமல் தவிக்கிறேன்’ என்று புலம்ப வேண்டியிருக்கும்.

பிறர் மெச்ச வேண்டும் என்பதற்காக யாரும் வாழவேண்டியதில்லை. பிறர் என்ன நினைப்பார்களோ என்று கவலைப்படவும் வேண்டாம். யாரும் உங்களை நினைத்து கவலைப்படப் போவதில்லை, உங்கள் வாழ்க்கையை நீங்கள் தான் வாழ வேண்டியிருக்கும்.

எந்த ஒரு விஷயத்தையும் தொடங்குவதா அல்லது வேண்டாமா என்று யோசனையில் காலம் தள்ளாதீர்கள். இந்த குழப்பமே மிகப்பெரும் சிக்கல் தரும். சிறப்பாக செய்ய வேண்டும், நிதானமாக செய்யவேண்டும் என்றெல்லாம் காலம் தாழ்த்திக்கொண்டே இருப்பவரால் ஒருபோதும் செயலில் இறங்கவே முடியாது. ரிஸ்க் எடுக்க வேண்டாம் என்று மனம் தள்ளிப்போட்டுக் கொண்டே இருக்கும். இங்கு தான் புத்தர் நண்பராக நின்று உதவி செய்வார். தொடங்கு அல்லது ஆசையை அழித்துவிடு என்று வழி காட்டுவார். வெற்றி கிடைத்தால் நல்லது தோல்வி கிடைத்தால் அனுபவம் என்ற மனப்பான்மையுடன் தைரியமாக களத்தில் இறங்கச் செய்வார்.

தோல்வியை பார்த்து பயப்படுவதற்கு எதுவும் இல்லை. கீழே விழாமல் யாரும்

www.gyaanaguru.com

# ஆழ் மனம் கடவுளை விட சக்தி வாய்ந்தது



சைக்கிள் கற்றுக்கொள்வதில்லை. எனவே, தோல்விகளை எல்லாம் அனுபவமாக எடுத்துக்கொள்ளும் மனப்பக்குவம் முக்கியம்.

பிறரை நம்பி செயலில் இறங்கக்கூடாது என்பது புத்தரின் வழிகாட்டுதல். எப்போதும் ஒரே ஒருவர் மீது மட்டுமே நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த ஒருவர் நீங்கள் தான். இதன் அர்த்தம் யாரையும் நம்பக்கூடாது என்பது அல்ல. எந்த மனிதர் மீதும் நம்பிக்கை இழக்க வேண்டாம். எல்லோரிடமும் அன்பு செலுத்துங்கள். ஆனால், அவர்கள் பிரதிபலனாக அன்பு செலுத்த வேண்டும், உதவி செய்ய வேண்டும், கை கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். நீங்கள் எத்தனை முறை பறித்தாலும் மீண்டும் மீண்டும் பூக்கள் மலர்ந்துகொண்டே இருப்பது போன்று, மனிதர்கள் மீது நம்பிக்கை வைத்துக்கொண்டே இருங்கள்.

ஏதேனும் ஒரு செயலை செய்வதற்கு மனம் குழப்பமாக இருக்கிறதா... கொஞ்சமும் யோசிக்காமல் அந்த செயலை கைவிடுங்கள். குழப்பம் என்றால் வேண்டாம் என்பதே அர்த்தம்.

புத்தரைப்போன்று தெளிவு கிடைத்துவிட்டால் மனம் உறுதியாகிவிடும். மனம் உறுதியாகிவிட்டால், இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவமாக எடுத்துக்கொள்ளும் பக்குவம் வந்துவிடும். எதுவும் அதிகம் காயப்படுத்தாது. எனவே, உங்களுடைய ஆசை, எண்ணம், விருப்பம், லட்சியம், கனவு போன்ற எல்லாம் குறித்து புத்தரிடம் பேசுங்கள். அதாவது உங்கள் ஆழ் மனதுடன் பேசுங்கள். உங்களுக்கே தெளிவான விடை கிடைத்துவிடும். அந்த தெளிவு வெற்றி தரும். ஒரு கட்டத்தில் உங்களுக்கு புத்தர் தேவைப்பட மாட்டார். உங்களுக்கே புத்தரைப் போன்ற தெளிவும் அறிவும் கிடைத்துவிடும்.

தெளிவு கிடைத்துவிட்டது என்றால், ஆழ் மனம் தாழ் திறந்துவிட்டது என்று அர்த்தம். அதன் பிறகு ஆசைப்பட்டது எல்லாமே நடக்கும் அல்லது நடக்கும் எல்லாவற்றையும் ஆசைப்படுவீர்கள். இத்தனை காலமும் கடவுள் நம்பிக்கையுடனே வாழ்ந்துவிட்டேன், இப்போது ஆழ் மனதை மட்டும் நம்பி என் வாழ்க்கையை ஒப்படைக்கலாமா என்று சிலர் தயங்கலாம்.

கடவுள் இந்த உலகை படைத்தார் என்று தான் நமக்கு சொல்லிக் கொடுத்தார்கள். கடவுளே மக்களை காப்பாற்றுகிறார் என்றும் மத குருமார்கள் சொல்லிவந்தார்கள். இப்போது அவர்கள், 'நீங்கள் எல்லோரும் வாருங்கள், நாம் கடவுளை காப்பாற்றுவோம், மாற்று மதத்தினர் சதி செய்கிறார்கள்' என்றெல்லாம் சொல்லி மதத்தில் குழப்பம் செய்கிறார்கள். கடவுளை மனிதர்கள் காப்பாற்ற வேண்டிய நிலைமைக்கு அத்தனை மதமும் வந்துவிட்டது. இப்படியொரு பரபரப்பு மற்றும் பதைபதைப்பையுமே அரசியல்வாதிகளும், மத குருமார்களும் விரும்புகிறார்கள். எனவே, கடவுளிடம் சிக்கிக்கொள்ளாதீர்கள்.


கடவுள் எதையும் செய்வார் என்று நம்பிக்கொண்டு காத்திருக்க வேண்டாம். உங்கள் ஆழ்மனம் கடவுளை விட சக்தி வாய்ந்தது. அத்தனை சக்தி வாய்ந்த ஆழ் மனதை உங்களால் நிச்சயம் திறக்க முடியும். ஆழ் மனதை திறந்துவிட்டால், உள்ளே அள்ள அள்ள பொக்கிஷம் நிரம்பியிருப்பதைக் காண முடியும்.

இப்போது, மற்றவர்கள் பார்வையில் நீங்கள் அதிர்ஷ்டசாலியாக இருப்பீர்கள். உங்களுக்கு நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் மகிழ்ச்சியை மற்றவர்களுக்கும் பரப்புங்கள். ஆழ் மன ரகசியத்தை எல்லோருக்கும் சொல்லிக்கொடுங்கள்.

மனித குலம் மகிழ்ச்சியுடன் திகழட்டும்.








# விருப்ப சந்தா

## 500 ரூபாய் செலுத்துங்கள்










மன நிம்மதிக்கு வழி சொல்லும் மகிழ்ச்சி, உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் தரும் யாக்கை, நாட்டு அரசியல் நிலவரத்தை நச்சென்று விமர்சனம் செய்யும் தமிழ் லீடர் ஆகிய இதழ்கள் ஞானகுரு பதிப்பகத்திலிருந்து இலவச மின்னிதழாக ஒவ்வொரு மாதமும் வெளிவருகின்றன. இதனை ஆதரிக்கும் வகையில் ஆண்டுக்கு **500 ரூபாய்** மட்டும் விருப்ப சந்தாவாக செலுத்துங்கள். பழைய இதழ்களைப் படிக்க எங்கள் இணையதளத்திற்கு வருகை தாருங்கள்.

\- ஞானகுரு (gyaanaguru.com)

பணம் அனுப்பவேண்டிய எண் : +91 72997 53999